விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு

சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 17 செவ்வாய்க்கிழமை (30.04.2002) தொலைபேசி 3378 ஒலி 132

## சமாதான முயற்சிகளுக்கு குந்தகம்

# 5 ஆயிரம் பேரை இராணுவத்தில் சேர்ப்பதற்கு அரசு நடவடிக்கை



### அடுத்த மாதம் முதல் ஆரம்பம்

(நமது நிருபர்)

**இராணுவத்தில் தற்போது நிலவும் ஆட்பற்றாக்குறையை உடனடியாக போக்குவதற்கு அடுத்து வரும் ஒரு மாதகாலத்துக்குள் 5ஆயிரம் இராணுவ வீரர்களை திரட்ட இராணுவத் தலைமையகம் நடவடிக்கை எடுத்து வருவதாக உயர் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் குணரத்தின நேற்றுத் தெரிவித்துள்ளார்.**

**அரசாங்கத்தின் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதாக இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

இராணுவத்திற்கான இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மே மாதம் 8ம் திகதி முதல் ஜூன் மாதம் 8ம் திகதி வரை சுமார் ஒரு மாத காலத்திற்கு நாடுதழுவிய ரீதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்த நிறுத்தத்திற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு சுமார் 2 மாதங்கள் கடந்த நிலையில் அரசாங்கம் இராணுவத்திற்கு 5 ஆயிரம் பேரை திரட்டப் போவதாக அறிவித்திருப்பது சமாதானத்திற்கான பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

18 வயது முதல் 24 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதாகவும், இவர்களது அடிப்படை சம்பளம் 4210 ரூபாய் என்றும், ஏனைய கொடுப்பனவுகள் உட்பட 15166ரூபா 23சதம் சம்பளமாக வழங்கப்படவுள்ளதாகவும், மேஜர் ஜெனரல் குணரத்தினா தெரிவித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)


### வல்வெட்டித் துறையில்
## புலிகளின் அரசியல் துறை பணிமனை திறந்து வைப்பு

(வல்வெட்டித்துறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பணிமனை, நேற்று வல்வெட்டித்துறை வேம்படி வீதியில், சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மு.ப.10.30 மணியளவில் பணிமனை திறப்பு விழா நிகழ்வு வடமாட்சி

மேஜர் நிலவனின் தந்தையார் சிவ பாலசிங்கம், மாவீரர் 2ம் லெப்டினன் பிரசன்னாவின் தந்தை



## தென்னிலங்கை அரசியல் கட்சிகள் விரும்பினால் புலிகள் அவற்றுடன் இணைந்து செயற்படத்தயார்.

### சு.ப. தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபடுவதற்கு தற்போது திறக்கப்பட்டுள்ள அரசியல் பணிமனைகளை ... தெரிவித்ததாவது:

தென்பகுதியில் உள்ள அரசியல் கட்சிகள் எம்முடன் சேர்ந்து இயங்க விரும்பின் அவர்களுடன் இணைந்து அங்கு அலுவலகங்களைத் திறந்து இயங்க ... வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தென் பகுதியில் உள்ள புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், புலிகளின் அரசியல் பிரிவினருடன்

(8ம் பக்கம் பார்க்க)

வேம்படி வீதியில், சம்பி ரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மு.ப.10.30 மணியள வில் பணிமனை திறப்பு விழா நிகழ்வு வடமராட்சி வடக்கு கடற்றொழிலா ளர் சமாசச் செயலாளர் எஸ். சூரியகுமார் தலை மையில் ஆரம்பமானது. நிகழ்வில் ஈகச் சுடரை மாவீரர்



(8ம் பக்கம் பார்க்க)

(நமது நிருபர்)

வடக்கு கிழக்கில் அரசியல் நட வடிக்கைகளில் விடுதலைப் புலி கள் ஈடுபடுவதற்கு தற்போது திறக் கப்பட்டுள்ள அரசியல் பணிம னைகள் போதாதென்றும் மேலும் 27 அரசியல் பணிமனைகள் வடக்கு கிழக்கில் திறக்கப்பட வுள்ளதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித் துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிக ளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந் துணர்வு உடன்படிக்கையை அடுத்து வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் காரியாலயங்களைத் திறந்து தமது அரசியல் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர். இந்நிலையில் தற்போது உள்ள அரசியல் பணி மனைகள் போதாது என்று வெளி நாட்டு செய்தி ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் சு.ப.தமிழ்ச்செல் வன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்பகுதியில் உள்ள அரசியல் கட்சிகள் எம்முடன் சேர்ந்து இயங்க விரும்பின் அவர்களுடன் இணைந்து அங்கு அலுவலகங்களைத் திறந்து இயங்க வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தென் பகுதியில் உள்ள புத்தி ஜீவிகள், அரசியல்வாதிகள், புலி களின் அரசியல் பிரிவினருடன்

(8ம் பக்கம் பார்க்க)

# புலி உறுப்பினர்கள் 28 பேர் நேற்று யாழ் வந்து சேர்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்பிரிவைச் சேர்ந்த 28 உறுப் பினர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 60 நாட்கள் கடந்த நிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் 2வது தொகுதியினர் யாழ் குடாநாட்டில் தமது அரசியல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் நோக்கில் யாழ் வந்து சேர்ந்துள்ளனர்.

(8ம் பக்கம் பார்க்க)

# இடைக்கால நிர்வாகசபை இனப்பிரச்சினைக்கு தீர்வல்ல

## நோர்வேப் பிரதியமைச்சர் கருத்து

(பாங்கொங்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபை மட்டும் தீர்வாக அமையாது என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.

அரசிற்கும் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு இரண்டு நாள் விஜயத்தை மேற் கொண்டு தாய்லாந்து சென்ற போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தை நீண்ட கால நோக்கில் அமுல்படுத்தப்பட வேண்டியவை.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது தொடர்பாக மட்டும் இப்பேச்சு வார்த்தை இடம்பெறமாட்டாது.

(8ம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவு உதவி ஆணையாளரின் அலுவலகம்முன் இன்றும் மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவி ருத்தித்திணைக்களத்தின் எண் பார் வைப்பகுதியில் கடந்த ஐந்து வருட ங்களாக கடமையாற்றிய உதவிக் கணக்காய்வாளர்கள் தம்மை நிரந் தரமாக்கக் கோரி யாழ்ப்பாணம் தட் டாதெருச் சந்தியில் உள்ள கூட்டு றவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் காரியாலயம் முன்பாக இன்று காலை மறியற்போராட் டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

1997ம் ஆண்டு கூட்டுறவுத்தி ணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சை ஒன்றில் சித்தியடைந்தவர்கள்

(8ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் முகமட நேற்று யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.எம். முகமட் நேற்று யாழ்ப் பாணம் வந்து சேர்ந்தார்.

யாழ் நகரப் பகுதியை சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர் யாழ் அரச செயலகத்தில் அரச அதிபர் கே.சண் முகநாதன் தலைமையில் நடை பெற்ற விசேட மாநாட்டில் கலந்து கொண்டார்.

இம்மாநாட்டில் செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன் பி.ப.2.30 மணிக்கு

(8ம் பக்கம் பார்க்க)

அன்பு வாசகர்களே!
நாளை மேதினத்தை முன்னிட்டு உங்கள்
**சங்கு நாதம்**
நாளை மறு தினம் வியாழக்கிழமை வெளிவரும்
(ஆ-ர்)

# தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக மே நாளில் போராட உறுதிபூணுவோம்

மாவை சேனாதிராஜா
பாராளுமன்ற உறுப்பினர்
தமிழர் தேசிய கூட்டமைப்பு

நாளை உலகத்தொழிலாளர்தினமாகும் இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

மே முதலாம்நாள் உலகத் தொழிலாளர்களின் வெற்றித் திருநாளாகும். உலத்திலுள்ள தொழிலாளர்வர்க்கம் இத் திருநாளில் தொழிலாளர்கள் பெற்ற அடிப்படை உரிமைகளுக்காக மட்டுமல்ல அதனைப் பாதுகாப்பதற்கும் புதியஉலகில் தொழிலாளர் வர்க்கத்திற்கெதிராக எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் உரிமைக்குக்குரல் எழுப்பவும் போராடவும் தீர்மானித்திட மேநாள்பயன் படுத்தப்படுகிறது.

தொழிலாளர்களின் புரட்சி

16ம்நூற்றாண்டில் அமெரிக்கநாட்டில் தொழிலாளர்கள் எட்டுமணிநேரம் வேலை கேட்டுப் பெற்றவெற்றியை அன்றுமுதல் இன்றுவரை ஒவ்வோராண்டும் கொண்டாடுகின்றனர் தொழில்புரட்சி ஏற்பட்டபின் தொழிலாளி என்ற வர்க்கம் உருவாகியது பின்னர் விவசாயிகளும் இணைந்து கொண்டு பாட்டாளிவர்க்கம் (Prolata riat) எனும் மாபெரும் உழைக்கும் வர்க்கம் எழுச்சி கொண்டது மார்க்ஸ் ஏஞ்சல் சித்தாந்தங்களை முன்னெடுத்துச் சென்ற மாமேதை லெனின் றெக்ஸி ஸ்ராலின் போன்ற தலைவர்கள் தொழிலாளர்வர்க்கத்தின் ஆட்சிகளை உலகில்உருவாக்கப் போராடினர்.

தொழில் புரட்சி

உலகத் தொழிலாளர் வர்க்கமே ஒன்றுசேர்எனும் சுலோகத்தை முன்னெடுத்துஉழைத்தனர் உலகம்முழுவதும் தொழிற்புரட்சியும் தொழிலாளர் வர்க்கப் புரட்சியும் எழுச்சிபெற்றது இறுதியில் உலகில் தொழிலாளர் வர்க்க ஆட்சியை ஏற்படுத்துவதற்கு முன் ரூசிய நாட்டில் 1917 நவம்பரில் பாட்டாளிமக்கள் ஆட்சியை ஏற்படுத்துவதில் லெனின்-ஸ்ராலின் தலைவர்கள் வெற்றிகண்டனர்.

50ஆண்டுகள் சோவியத் ரூசியா வல்லாண்மை நாடாகவும் சீனா மாபெரும் பொதுவுடமை நாடாகவும் தொடர்ந்து பலநாடுகளில் பொதுவுடமை கட்சிகளும் சோசலிசச் செல்வாக்குமிக்க ஆட்சிகளும் வளர்ந்தன.

50ஆண்டுகளின்பின் ரூசிய சீனா போட்டா போட்டிகள் உலகில் பொதுவுடமை சோஷலிஸ ஆட்சிகளிடத்தில் பிளவுகளையும் தோல்விகளையும் தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றன.

தனியார் மயப்படுத்தல்

இதனால் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளுக்கும் ஏனைய உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்கும் பங்கம் ஏற்படுவதுமட்டுமல்ல உழைக்கும் வர்க்கத்தின் உரிமைச்சாசனங்கள் செயலற்றுப்போகின்றது.

புதிய அறிவியல் வளர்ச்சி தொழில்வளநாடுகளின் உற்பத்திப் பெருக்கம் தொழில்நுட்ப முன்னேற்றங்களினால் வளர்ந்த நாடுகள் மேலும் பொருளாதார ஏன் ஆயுத ஏற்படுத்தின மூன்றாம்உலக ஆசிய நாடுகளில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆபிரிக்கநாடுகளில் விடுதலைக்கான போராட்டங்களுக்கு சோவியத்ரூசியா ஆதரவு அந் நாடுகளின் தேசியஇனங்களுக்குப் பேருதவியாயிருந்ததுண்டு.

குறிப்பாக சோவியத்ரூசியா பிளவுபட்டதும் சர்வதேசத்தில் வல்லாண்மைச் சமபலம் வீழ்ச்சியடைந்து ஏகாதிபத்திய முதலாளித்துவவல்லாண்மை நாடுகளின் மேலாதிக்கம் மேலோங்கிநிற்கின்ற உலகில் சோசலிசம் பொருளாதாரக் கட்டமைப்பில் சரிவு ஏற்பட்டு வருகின்றது.

தொழிலாளர் போராட்டங்களும் பலவீனமடைந்து வருகின்றன அதற்குப்பதிலாக உலகில்புதிய பொருளாதாரக் கொள்கை அதாவதுஉலகமயமாக்கல் (Globalaisfim) சந்தைப் பொருளாதாரம் (Marketeconomy) மற்றும்அரசபொதுத் துறை நிறுவனங்கள் தனியார் மயப்படுத்துதல் என்பனவற்றால் உலகநாடுகளில் பெரும் உற்பத்திகளில் கூடஏகபோக ஆதிக்கம் உலகில் ஏற்பட்டு வருவதால் வளர்முக வறிய நாடுகள் மேலும் பலவீனப்பட்டு மேலாதிக்க நாடுகளை தஞ்சமடைந்து ஆட்சிபுரியும் நாடுகளாக மாறிவருகின்றன

எதிர் காலத்தில் பொருளாதார வளம் பெற்ற நாடுகளுக்கும் மேலாண்மையினால் அடக்கப்பட்ட நாடுகளுக்குமிடையே போர் அபாயங்கள் ஏற்படும் நிலையைக் காணலாம்.

மனித உழைப்பு சுரண்டல்

மறுபக்கத்தில்வல்லாண்மை நாடுகள் வறிய வளர்முக நாடுகளில் தங்கள் இயந்திரப் பொருள் உற்பத்திகளுக்கு பெரிய சந்தைகளை பெருக்கும் நோக்கில் எவ்வகையிலும் அந்நாடுகள் சமரசங்கண்டு விடுகின்றனர் இதற்கும் மேலாக வறிய நாடுகளில் தங்கள் முதலீடுகளின் மூலம் மலிவாக மனித உழைப்பு சுரண்டப்படும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி பெரும் இலாபங்களையும் ஏற்றுமதிகளையும் பெறும் செல்வந்த நாடுகள் வளம் பெற்று வருகின்றன.

இவைகளில் தேசிய இன விடுதலைப் போராட்டங்களும், தொழிலாளர் மற்றும் உழைக்கும் வர்க்கத்தின் போராட்டங்களும், வலுவிழந்தும், அடக்கப்பட்டும், ஒடுங்கிப் போகின்ற நிலைமைகளைக் காணக்கூடியதாயிருக்கிறது.

தமிழர் விடுதலைப் போராட்டம்

இலங்கையும் உலகின் புதிய பொருளாதார- உலகமயமாக்கல், சந்தைப் பொருளாதாரம் எனும் கொள்கையினால் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் பேரினவாத ஆட்சிகளினால் இராணுவரீதியில் அடக்கப்பட்டபொழுது இலங்கையில் கடந்த இருபதாண்டுகளில் ஆயுதப் போர் ஏற்பட்டு நாடும் இனங்களும் அழிந்து கொண்டதை யாவரும் அறிவோம்.

இந்நிலையில் 2001ஆம் ஆண்டு இணுவிலில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாபெரும் 'மே' நாள் நிகழ்ச்சியைக் கொண்டாடியதை அறிவீர்கள். தொழிலாளி- விவசாய, மொத்தமாக உழைக்கும்வர்க்கத்தின் உரிமைகளுக்காக மட்டுமல்ல தமிழ்த் தேசிய இனத்தின் தமிழ்த் தேசத்து மக்களின் விடுதலைக்காகவும் போராட வேண்டுமெனப் பிரகடனப்படுத்தி மக்களிடம் அணிதிரளுமாறு அழைப்பு விடுத்திருந்தோம்.

2001செப்ரெம்பர்திங்களில் அமெரிக்க ஜனாதிபதியின் பயங்கர வாதத்திற்கெதிரான போர் உலகம் முழுவதும் பறைசாற்றப்பட்ட பொழுது இலங்கை ஜனாதிபதி அத்தசந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தி, பயங்கரவாதப் போர்தான் இங்கும் நடைபெறுவதாக அமெரிக்காவையும் நேட்டோ நாடுகளையும் அழைத்து, ஐம்பது ஆண்டுகால தமிழ்த் தேசத்து மக்களின்விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட எடுத்த நடவடிக்கைகளுக்கெதிராக ஐப்பசித் திங்களில் ஆயுதமெடுத்துப் போராடிய இயக்கங்களும் ஜனநாயக ரீதியில் இயங்கி வந்த கட்சிகளும் ஒன்றுபட்டுத் தமிழ்த் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த பொழுது அதற்கு டிசம்பர் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேச மக்கள் மிகப் பெருமளவில் அங்கீகாரமளித்தனர். ஆணை தந்தனர்.

இன விடுதலைத் தினம்

அதற்குப் பிறகுமுதல் வரும் ''மே''- முதல் நாள் கொண்டாட்டம் தமிழ்த் தேசத்து விடுதலையை நோக்கமாகக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள்இயக்கமும்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் ஏனைய உழைக்கும் வர்க்கமும் ஒன்றிணைந்து கொண்டாட முடிவு செய்துள்ளன. உழைக்கும் வர்க்கத்தின்மேதினம் பேரினவாதஅடக்குமுறையில்பாதிக்கப்பட்டமக்களும் தொழிலாளர் உரிமைக்காகவும், மனித உரிமைகளுக்காகவும், அதே நேரத்தில் தமிழ் தேசத்து இனங்களின் அரசால் விடுதலைக்காகவும், தீர்மானங்களையும் பிரகடனங்களையும் வெளியிடவுள்ளன.

மேலும் ஓரணியில் மக்களைத் திரட்டித்தமிழ்தேசத்து மக்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கவும் முன்னெடுக்கவும் உறுதி பூண்டுள்ளன.

எனவே அனைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழர் தேசியக் கூட்டமைப்பும் மருதனார்மடம் கல்லூரி மைதானத்தில் மே- 1 மாலை இடம்பெறும் மே- நாள் விழாவிலும் ஊர்வலத்திலும் கலந்து கொண்டு பங்களிப்புச் செய்ய வேண்டுமென அழைப்பு விடுக்கின்றேன்.




ஆதனவரி அறிவித்தல் 2002

நல்லூர்

உப-அலுவலகம்

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபை கட்டளைச் சட்டம் இல: 134 (5) இன் கீழ் அதற்கு உரித்தாக்கப் பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக ஆதனவரி அறவீடு புதிதாக மீளாய்வு செய்யப்பட்ட ஆதன மதிப்பீட்டினது 10% வரி விகிதப்படி 01-07-2002 இல் இருந்து அறவீடு செய்யவேண்டுமென தீர்மானிக்கப் பட்டுள்ளது. இது சம்பந்தமான அறிவித்தல் பத்திரங்கள் தற்பொழுது தங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன என அறியத்தருகின்றேன். அறிவித்தல் பத்திரம் கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் தங்களுக்கு வரி அதிகரிப்பு சம்பந்தமான ஆட்சேபனை எதுவும் இருப்பின் கடிதமூலம் தலைவர், நல்லூர் பிரதேச சபைக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஒரு மாத காலத்திற்கு பின்னர் கிடைக்கும் ஆட்சேபனைகள் எக்காரணம் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படமாட்டாது என அறியத் தருகின்றேன்.

க. மணிபல்லவராஜன் (ஜே. பி. யு. எம்.)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை,

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
29-04-2002.

(C-4022)


# ஈழத்தமிழரின் அபிலாசையை கூட்டு மேதினத்தில் வெளிப்படுத்துவோம்

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் அழைப்பு

ஈழத்தமிழரின் அபிலாசைகளை உலகறியச் செய்யவும் தொழிலாளரின் உரிமைகளிற்குக் குரல்கொடுக்கவும், கூட்டு மேதினத்தில் கூட்டுறவு ஊழியர்கள் அனைவரும் அணிதிரண்டும்,

தமிழ்த்தேசிய இனம் மரபுவழித்தாயகம், சுயநிர்ணயஉரிமை ஆகிய தமிழ் மக்களின் அபிலாசைகளை உலகறியச் செய்வதற்குகூட்டு மேதினத்தில் கூட்டுறவு ஊழியர்கள் அனைவரும் இணைந்து குரல் கொடுப்போம்.

இவ்வாறு கூட்டுறவு ஊழியர்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

சங்கம் மேதினத்தை யொட்டி நேற்று செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தொடர்ந்துநீண்டுநிலைத்த போராட்ட சூழ்நிலையில் எமது பிரதேசம் இழந்தவை மதிப்பிட முடியாதவை. போர், புலப்பெயர்வு என்ற அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள் கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்து நலிவடைந்த நிலையில் இருப்பதோடு, கூட்டுறவு ஊழியர்கள் பல்வேறு பாதிப்புகளுக்கும் உள்ளாகி உள்ளனர். மிகக் குறைந்த வேதனத்தில் கூடிய வேலைப்பழுவை சுமந்து செல்லும் எம் ஊழியர் வாழ்க்கைச் சுமையைச் சுமக்கமுடியாது தினறும் பரிதாப நிலையே நிலைத்து விட்டது. எமது ஊழியர்களுக்கான சம்பள மீளாய்வு சுற்றறிக்கை, வாழ்க்கைப் படி சுற்றறிக்கை, இன்னும் பயிற்சிக்கான படிகள் என்ற சுற்றறிக்கைகள் அரைகுறைச் செயல்வடிவங்களும், வெறும் காகிதமாகவும் இருக்கும் பரிதாபநிலை வேறு.

எமது சங்கங்களின் இழப்புகளைப் பெற்றுக்கொள்ளவும், எமது உரிமைகளை வென்றெடுக்கவும் மேதினத்தில் அணிதிரள்வோம். குரல் கொடுப்போம்!

அனைத்து கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் பிற்பகல் 2.30 மணிக்கு இணுவில் கந்தசாமி கோவில் முன்பாக ஒன்றுகூடி அதில் இருந்து ஊர்வலமாக சென்று அனைவரும் லங்கா சீமெந்து லிமிட்டட் நிறுவனத்தின் முன்பாக கூட்டு மேதின ஊர்வலத்தில் இணைந்து மருதனார் மடத்தில் நடைபெறும் மேதினக் கூட்டத்தில் பங்குகொள்ளக் கூடியதாக முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அனுருத்தவுக்கு பிணை வழங்கநீதிபதி மறுப்பு

(கொழும்பு)

மடவளைப் படுகொலைசம்மந்தமாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல்அனுருத்தரத்வத்தையின் பிணை மனு தெல்தெனிய நீதவானால் மறுக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் ரத்வத்தையின் பிணைமீதானமனு நேற்று தெல்தெனியநீதவான்இனோகாரணசிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதுசாட்சியங்கள் எதுவும் பூர்த்தியாக வில்லைஎன்று கூறி அவரது பிணை மனுவை ஏற்கநீதிபதி மறுத்துவிட்டார்.

இந்நிலையில் இவ்வழக்குத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 19பேரையும் அடுத்தமாதம் 33ந் திகதிவரை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிவான் இனோகாரணசிங்கா உத்தர விட்டுள்ளார். (வ)

# விபரங்கள் திரட்டும் பணியில் புறக்கணிப்பு

# கிராம அலுவலர்கள் கடும் ஆட்சேபனை

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் உள்ளூரில் இடப்பெயர்ந்த மக்கள் பற்றிய விபரங்களைத் திரட்டும் பணியில் கிராம உத்தியோகத்தர்கள் புறந்தள்ளப்பட்டு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பயன்படுத்தப்படவுள்ளமை குறித்து யாழ். மாவட்ட கிராம உத்தியோகத்தர் சங்கம் கடும் ஆட்சேபனையும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளது.

இது விடயம் தொடர்பாக, மேற்படி சங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதுவராலயம் மற்றும் புனர்வாழ்வு அகதிகள் விவகார அமைச்சுக்கும் மகஜர்களை நேற்றைய தினம் அனுப்பிவைத்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளரான ஏ. தனபாலரத்தினத்தினால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜர்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நீங்கள் இடம்பெயர்ந்தவர்களா நாங்கள் உங்களுக்கு உதவி செய்கிறோம் என்ற தலைப்பிட்டு செய்தி ஊடகங்களில் புனரமைப்பு புனர், வாழ்வு அமைச்சு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராலயம் ஆகியன இணைந்து வெளியிட்ட விளம்பரத்தில் புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவராலயம் மற்றும் கிராம உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது பற்றிய எத்தகைய தகவல்களும் இதுவரை அமைச்சினாலோ தூதுவராலயத்தினாலோ அல்லது மாவட்டச் செயலாளரான அரசாங்க அதிபரினாலோ எமக்கு தரப்படவில்லை.

அதேவேளை இத்தகைய விபரங்கள் திரட்டும் பணியில் க.பொ.த. உயர்தர தராதரமுள்ள இளைஞர்கள் பயிற்றப்பட்டு ஈடுபடுத்தப் படவுள்ளனர் என நாம் செய்தி ஊடகங்கள் மூலம் அறிந்துள்ளோம்.

ஆயினும் தற்போது இப் பணியினை சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட விருப்பதாக அறிய வந்துள்ளோம்.

இடம்பெயர்ந்த மக்கள் பற்றிய பணிகள் தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களே ஆரம்பம் முதல் ஈடுபடுத்தப்பட்டு வந்துள்ளனர். அவர்கள் தமது வழமையான பணிகளுக்கு அப்பால் ஊதியத்துடனோ அல்லது ஊதியமின்றியோ மிகவும் கஷ்டமான அசாதாரண சூழ் நிலையில் அரசுக்கும் அகதிகளுக்கான தூதுவராலயத்துக்கு உதவிவந்துள்ளனர்.

இது இவ்விதமிருக்க கிராமிய மட்டத்தில் விவசாயத்துறை முதல் குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரங்கள் வரை திரட்டும் பணியில் கிராம உத்தியோகத்தர்களே இது வரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ள நிலையில் இக் குறிப்பிட்ட பணியில் மட்டும் வேறுதரத்து உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படுவது குறித்து நாம் மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம்.

இத்தகைய வர்களால் திரட்டப்படும்புள்ளி விபரங்கள் தவறான தகவல்களையும் விபரங்களையுமே வழங்குவதுடன் எமது எதிர் காலப்பணிக்கு குந்தகமாக அமையும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மகஜர்களின் பிரதிகள் யாழ். மாவட்ட அரச அதிபருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-77)

## 3 நாள் கிரிக்கெட்போட்டி

## வெற்றிதோல்வியின்றி முடிவு

(கொழும்பு)

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுலா மேற் கொண்டுள்ள இலங்கை அணிக்கும் தென் பிராந்திய அணிக்குமிடையே கண்டபரியில் நடைபெற்ற மூன்று நாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இலங்கை அணி முதல் இனிங்ஸில் 325 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மகேலஜெயவர்த்தன 119ஓட்டங்களையும் றசல் ஆனற் 81 ஓட்டங்களையும் அரவிந்தடி சில்வா 63 ஓட்டங்களையும் சமரவீர 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

தென்பிராந்திய அணி முதலாவது இனிங்ஸில் 6விக்கெட் இழப்பிற்கு 419 ஓட்டங்களைப் பெற்றது. (உ-9)

யாழ். மாநகரசபை எல்லைக்குள்

## வீட்டு இலக்கம் இடுவதில் புதிய நடைமுறை அமுல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் வீடுகளுக்கான புதிய முறையிலான இலக்கம் எழுதும் முறையை அறிமுகப்படுத்தவுள்ளதாக மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தசாவதானி அமரர் சரவண முத்து ஆறுமுகத்தின் சிந்தனைப் படியாக வீட்டு இலக்கத்தை அறிமுகம் செய்துள்ள மாநகர முதல்வர் அது பற்றி மேலும் தெரிவிக்கையில்;

மாநகரசபையினால் 1982 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதன மதிப்பீட்டின் பிரகாரம் வழங்கப்பட்ட வீட்டு இலக்கம் பழைய இலக்கமாகவும், 1993 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதன மதிப்பீட்டின் பிரகாரம் வழங்கப்பட்ட வீட்டு இலக்கம் புதிய இலக்கமாகவும் தற்போது கருதப்படுகின்றது.

ஆதனங்களுக்கான இலக்கங்கள் பழையது புதியது எனக் குறிப்பிடப்படுவதால் மாநகரசபை எல்லைக்குள் தபால் விநியோகத்தில் ஈடுபடும் தபால் ஊழியர்கள் பெரும் குழப்பங்களை எதிர் நோக்கியுள்ளனர். இதனால் வெளிநாடுகளில் இருந்து வீட்டு இலக்கங்கள் குறிப்பிட்டு வரும் கடிதங்களை விநியோகிப்பதில் சிக்கல்களும், தாமதங்களும் எதிர்நோக்கப்பட்டுவருகின்றன.

இவற்றினை எதிர்காலத்தில் தவிர்க்கும் பொருட்டு நீக்கப்படவேண்டிய நடைமுறை பற்றியும் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறை பற்றியும் முதல்வர் சிபார்சு செய்துள்ளார்.

இதன் அடிப்படையில் உதாரணமாக பழைய இலக்கம் 26 நீக்கப்பட்டு புதியமுறையான 26 (Y 1982) எனவும் புதிய இலக்கம் 41 நீக்கப்பட்டு புதிய முறையான 41 (Y 1993) என்பதையும் கடைப்பிடிக்கும்படியும் முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படின் ஆதன இலக்கங்கள் தொடர்பான குழப்பங்கள் தீர்க்கப்படும் எனவும் முதல்வர் செல்லன் கந்தையன் தெரிவித்துள்னார். (உ-77)

## கோட்டை வட்டாரத்தில் மீளக்குடியமர உதவுங்கள்

## இராணுவஅதிகாரிக்குகடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர கோட்டை வட்டாரத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் இப்போது பாடசாலைகளில் தஞ்சம் புக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் அவர்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாநகரசபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் யாழ் நகரில் உள்ள 512 ஆம் பிரிகேட் இராணுவ அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியால் யாழ். மாநகர கோட்டை வட்டாரத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் சிலர் முஸ்லிம் மக்களின் வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள்.

இப்போது ஏற்பட்ட சமாதான சூழ்நிலை காரணமாக முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணம் வந்து தமது வீடுகளில் குடியமரத் தொடங்கியுள்ளனர்.

இதனால் அவ்வீடுகளில் வசித்து வந்த மக்கள் அவ்வீடுகளை விட்டு வெளியேறி பாடசாலைகளில் தஞ்சமடையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## 'ரிஷி' உணவுப் பதார்த்த அறிமுக விழா நல்லூரில்

(தென்மராட்சி)

கருவில் இருந்து கல்லறை வறையான காலத்தில் பயன்படுத்தக்கூடிய உணவுப் பதார்த்தமே மூலிகைகளின் அரசனான ''ரிஷி'' எனும் காளானாகும். இது மருந்து அல்ல, அதனைப் பாவிப்பதன் மூலம் மனிதனின்நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி நீண்ட ஆயுளைப்பெபற முடியும்.

யாழ். மாவட்டஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஷ்ணசாமி நல்லூரிலுள்ள முன்பள்ளி பயிற்சிக்கூடத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட 'ரிஷி' உணவுப்பதார்த்தம் அறிமுகவிழாவின் போது இவ்வாறு தெரிவித்தார்.

இவ் வறிமுகவிழாவில் உள்ளூராட்சி அமைப்புகளில்பணி செய்யும் ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இந் நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்டத்தலைவர் டாக்டர் வி. தியாகராசா பிரதமவிருந்தினராகப் பங்கு கொண்டு இந்த உற்பத்தி தொடர்பானமேலதிக விபரங்களை வழங்கினார். (உ-77)

## மத்திய மாகாண சபையை பொ.ஐ. மு. நிர்வகிப்பது ஜனநாயக விரோதம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிறுபான்மை ஆட்சியின்கீழ்மத்திய மாகாண சபை நிர்வாகம் இருப்பது ஜனநாயகத்தைக் கேள்விக்குறியாக்கும்என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அங்கத்தவர்கள் மத்திய மாகாண சபையில்பெரும்பான்மையாக உள்ளனர். அப்படி இருந்தும், பொதுஜன ஐக்கிய முன்னணி, நிர்வாகத்தை விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை. இது எவ்வகையிலும் நியாயமற்றது.

இவ்வாறு கண்டியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பேசும் போது பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணசபையின் 58 உறுப்பினர்களில் 31 பேர் ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிப்பவர்கள் எனினும் அதன் நிர்வாகத்தை பொதுஜன ஐக்கியமுன்னணியே மேற்கொள்வதுகுறிப்பிடத்தக்கது.(உ-5)

## வீடுகளுக்குள்பட்டாசுஎறியும் வீணர்களின்விஷமச் செயல்

### உயிருக்கு ஆபத்தை உண்டு பண்ணும்

(சுண்டுக்குளி)

வெடி பொருட்களை கொளுத்தி போத்தலுடன் வீடுகளினுள் எறியும் விஷமத்தனமான செயல்களில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன் தினம் மாலை ஈச்சமோட்டைப் பகுதியில் சைக்கிள்களில் சென்ற இரண்டு இளைஞர்கள் பட்டாசைக் கொளுத்தி போத்தலுடன் வீடுகளில் வீசியுள்ளனர்.

இதனை அடுத்து அப் பகுதி பொது மக்கள் சிலர் இளைஞர்கள் இருவரையும் துரத்திப் பிடிப்பதற்கு முயன்ற போதும் அவர்கள் இருவரும் தப்பியோடி தலைமறைவானதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நீண்ட கால இடை வெளியின் பின்னர் குடா நாட்டில் வெடிப்பொருட்களின் பாவனையினால் பலருக்கு உளத்தாக்கமும், அபாயமும் ஏற்பட்டு வருவதாக பொது மக்கள் தரப்பில்கவலையும் விசனமும் தெரிவிக்கப்படுகிறது. (த-110)

## இராசிபலன்

30-4-2002

(சித்திரை 17, செவ்வாய்)
சதுர்த்தி பி இ. 3 38 வரை
கேட்டை மு. இ- 7 30 வரை
ராகுகாலம்-2.58-4 28
நல்லநேரம்-10 28-11.58
சித்தாமிர்தம்

**மேடம்**
எதிர்பாராத பிரச்சினை, பிரயாணக்கஷ்டம், தொழில் மந்தம், முயற்சிநாமதம்

**இடபம்**
விருந்துபசாரம், அபூர்வ சந்திப்பு, திடீர்பயணம், தனவரவு

**மிதுனம்**
சத்துருஜெயம், போசன சுகம், காரியசித்தி, உறவினர் வருகை

**கடகம்**
குடும்பக்கவலை, கௌரவக் குறைவு, முயற்சிதாமதம், தொழில்நன்மை

**சிங்கம்**
நிலைமாற்றம், காரியம் கைகூடும், உடல்நலக்குறைவு, பயந்தசுபாவம்

**கன்னி**
அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, தொழில்நன்மை, பொருள்சேர்க்கை

**துலாம்**
கௌரவக்குறைவு, வாக்குப்பகை, காரியதாமதம், தொழில்கஷ்டம்

**விருச்சிகம்**
போசன சுகம், புதிய பொருள்சேர்க்கை, முயற்சி கைகூடும், தெய்வசிந்தை

**தனுசு**
பிரயாணம், முயற்சிதாமதம், நல்ல வரவேற்பு, சயன சுகக்குறைவு

**மகரம்**
கீர்த்தி, காரியஅனுகூலம், தொழில்லாபம், பெரியோர் சந்திப்பு

**கும்பம்**
அதிக பிரயாசை, தூர தேசச்செய்தி, காரிய அனுகூலம், தொழில்விருத்தி

**மீனம்**
கட்டுப்பாடு, உடல்வியாதி, முயற்சிதாமதம், தொழில் கஷ்டம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## மே தின ஊர்வலத்திற்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிகண்ணாடிதொழிற் சங்கம் நாளை இணுவிலில் ஆரம்பமாக உள்ள கூட்டு மே தின ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக மு.ப.11.00 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவில சனசமூக நிலையத்தில் மேற்படி நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை சங்க உறுப்பினர்களை சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுளது. (எ)

## முறைசாராப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிக் கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவால் பளை மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்பட இருந்த தமிழ்ச் சுருக்கெழுத்து தட்டச்சு வகுப்புகள், எதிர்வரும் 2 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு வடமராட்சி சுருக்கெழுத்து கழகத்தில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகள் தொடர்ச்சியாக 8 மாதங்கள் இடம் பெறவுள்ளன.

(உ-9)

# பாகிஸ்தானில் இன்று திட்டமிட்டபடி கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இன்று திட்ட மிட்டபடி கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு இடம்பெறும் என்று ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கருத்துக் கணிப்பு இடம்பெறக்கூடாது என்றும், இடம்பெறவேண் டும் என்றும் அரசியல் கட்சி கள் மட்டில் முரணான விவா தங்கள் இடம்பெற்று வந்த வேளை ஐரோப்பிய யூனிய னின் அழுத்தத்தின் காரண மாகவே இன்று கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு இடம் பெறவுள்ளது.

இதேவேளை, வாக்கெடுப்பு இடைநிறுத்தப் பட்டால் ஐரோப்பிய யூனியனால் பாகிஸ்தானுக்கு கிடைத்து வரும் உதவிகள் ரத்துச் செய் யப்படும் என்று ஐரோப்பிய யூனியன்விடுத்த எச்சரிக் கையை அடுத்தே இக்கருத்துக் கணிப்பு இடம்பெறவிருப்ப தும் குறிப்பிடத்தக்கது.

அடுத்தடுத்த மாதமளவில் பாகிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா இல் லையா என்ற கருத்துக் கணிப்பே இன்று இடம்பெறு கிறது. (உ-7)

# அமெரிக்க அழுத்தத்தால் அரபாத் அலுவலக முற்றுகை முடிவுக்குவந்தது

(ஜெருசலேம்)

மேற்கு கரையோரத்தின் ரமல்லாவிலுள்ள ஜனாதிபதிய சிர் அரபாத்தின்தலைமை அலு வலகம் மீதான முற்றுகை முடிவுக்கு வந்துள்ளது.

அரபாத்தின் தலைமை அலு வலகத்தினை முற்றுகையிட் டிருந்த இஸ்ரேலிய படை யினரை உடனடியாக வாபஸ் பெறுமாறு அமெரிக்க ஜனாதி பதி ஜோர்ச்டபிள்யூ புஷ் இஸ் ரேலிய பிரதமர்ஏரியல் ஷரோ னுக்கு அறிவித்திருந்ததை யடுத்தே இம் முற்றுகை முடி வுக்கு கொண்டுவரப்பட்டுள் ளது.

புஷ்ஷின் இந்த அறிவிப்பில் பலஸ்தீனர்களால் கைது செய் யப்பட்டிருக்கும் 6 இஸ்ரேலி யர்களுக்கும் அமெரிக்க பிரிட் டிஷ் அதிகாரிகள் பாதுகாப்பு வழங்க வேண்டும்,

ஜனாதிபதி அரபாத் விரும் பிய பிரதேசங்களுக்கு சென்று வர இஸ்ரேலியப் படைகள் அனுமதிக்க வேண்டும் என பனவும் அடங்கியுள்ளன.

இதற்கிடையில் ஜெனின் அகதிமுகாம் தொடர்பாக விசாரணைகளை நடத்து வதற்கு இஸ்ரேல் ஒத் துழைக்க மறுத்துவருவதும் குறிப்பிடத்தக்கது. (எ-8)

# பலவருடங்களுக்குப் பின்னர் ஆப்கானில் மிகப் பெரிய இராணுவ அணி வகுப்பு

(காபூல்)

ஆப்கானிஸ் தா னி ல் பல ஆண்டுகளுக்குப் பிறகு மிகப் பெரிய இராணுவ அணிவகுப் பொன்று இடம் பெற்றுள் ளது.

இதில் ஆயிரக்கணக்கான மொஜாகுதீன் போராளிகள் கலந்து கொண்டனர்.

பத்து ஆண்டுகளுக்கு முன் னர் காபூல் நகரை வடக்குக் கூட்டணியினரிடமிருந்து மீட் டெடுத்ததை கொண்டாடும் முகமாகவே இவ் அணி வகுப்பு நடை பெற்றுள்ளது. (செ)

# ஆப்கானிஸ்தானில் ஆயுதக்குழுக்களுக்கிடையில் மோதல்;25 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில்இரண்டு ஆயுதக் குழுக்களுக் கிடையே இடம் பெற்றமோதலில் இரு பத்தைந்து பேர் பலியாகிய துடன் பலர் படுகாயமடைந் துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் பதவி இறக்கப் பட்டபாட்ஷா ஜான் கால்ரா என்பவரது ஆதரவாளர்களுக்கும், தற் போது அப்பகுதியில் கவர்ன ராக இருக்கும் தாஜ் முகமட் பாஹ்ரா என்பவரது படை யினருக்கும் இடையிலேயே இம் மோதல் இடம்பெற்றது.

இருந்த போதிலும் இம் மோதலின் போது கொல்லப் பட்டவர்கள் அனைவரும் பொதுமக்களே எனத் தெரி விக்கப்படுகிறது. (செ)

# தற்கொலை புரிந்த விவசாயிகள் குடும்பத்திற்கு 20லட்சம் ரூபா நன்கொடை

(புதுடில்லி)

ஆந்திரமாநிலத்தில் தற் கொலை செய்து கொண்ட விவசாயிகளுக்கு காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்திஇருபதுலட்சம்ரூபாவை நன்கொடையாக வழங்கியுள் ளார்.

விவசாயத்தையே ஜீவனோ பாயமாகக் கொண்டிருந்த 90· விவசாயிகள், அத் தொழில் நலிவடைந்ததனால் மன முடைந்து தற்கொலைசெய்து கொண்டார்கள்.

இவர்களின்குடும்பங்களுக்கு பொதுமக்களிடமிருந்து திரட் டப்பட்ட பணத்தை யே சோனியாகாந்தி நன்கொடை யாக வழங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (செ)

# 50 வருடங்கள் பிரிந்திருந்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்தனர்

(சியோல்)

ஐம்பது வருடங்களுக்கு மேலாக பிரிந்திருந்த வட கொரிய- தென்கொரியாவைச் சேர்ந்த தமது உறவுகளைச் சந்தித்த உணர்வுபூர்வமான நிகழ்வு மயமன்மலை என்ற தீவில் இடம்பெற்றுள்ளது.

கொடிய யுத்தத்திற்குப் பின்னர் இணைந்துள்ள இவ் விரு நாடுகளைச் சேர்ந்தவர் களும் தமது உறவுகளைச் சந் தித்து தமது அன்பை பரிமா றிக் கொண்டார்கள்.

இத்தகைய உணர்வுபூர்வ மான நிகழ்வு இது நான்கா வது தடவை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இவ்வளவு காலமும் இவ் விரு நாடுகளைச் சேர்ந்தவர் களும் ஒருவரையொருவர் ஒரு வகையிலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியா திருந்தமை குறிப்பிடத்தக்கது. )செ)

# தபால் திணைக்களம் தனியார் மயமாகாது

(கொழும்பு)

தபால் திணைக்களத்தை தனியார் மயப்படுத்துவ தில்லையென அரசு முடிவு செய்துள்ளது.

இத் திணைக்களத்தை தனி யாருடன் போட்டி போடக் கூடிய வகையில் மாற்றி அமைக்கத் திட்டமிட்டிருப்ப தாக வெகுஜனத் தொடர்பு அமைச்சர் இம்தியாஸ் பார்க் கீர் மாக்கார் தெரிவித்துள் ளார். (உ-5)

## சின்னம்மை

நிலையிலும் கூடத்தானாக வியாதி தணிந்து பூரண குணம் ஏற்படுவதும் உண்டு.

சிகிச்சை

சிக்கல்கள் ஏற்படாத நிலை யில் சின்னம்மைக்கு எவ்வித மான விசேட சிகிச்சையும் தேவையில்லை. நோயாளி யைச் சுத்தமாக வைத்திருந் தாலே போதும். அதாவது நாள் ஒன்றிற்கு இருமுறை பெர்மாங்கனேட் கலந்தநீரில் நோயாளியைக் குளிப்பாட்டி, நன்கு துவைத்துச் சூரிய ஒளி யில் உலர்ந்த ஆடைகளை அணிவித்து நல்ல ஆகாரம் அளித்தால் போதுமானதா கும்.

## அதீத மனத்தை

இராச்சியங்களைக் கட்டி ஆள் கின்ற வல்லமை இருந்தாலும் அன்பின்மையால் வீழ்ந்தார் கள்.

வெறும்வார்த்தைஜாலங்கள் அன்பாகமுடியாது, உலக மகா சக்தியான அன்பு எமது உள்ளத்தை முழுமையாக நிரப்புமாயின் செயல்கள் அன்புவழியில்அமையும். உலக அறநூல்களும், சமய நூல்க ளும் இதனையே எடுத்துச் சொல்கின்றன.

அன்பான இதயத்தில் இருந்து வரும் புத்தி ஜீவித்தன்மையும் சிரித்த விறு விறுப்பான ஆளுமையும் நல்ல தொருமனிதனை உருவாக் குகின்றன. மற்றையோரை அன்பினால் ஆக்கிரமிக்கும் சக்தியும் இசைவாக்கும் திற னும் உடையோராக கர்வம் அற்ற விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு உள்ள மனிதரா யின் அங்கு ஆளுமையுடமிடப் படும். அது செல்வாக்குடைய ஆளுமையாகவிருத்தி பெறும். அன்பு ஒன்றுக்குத் தான்எதை யும் தாங்கும்சக்தி இருக்கிறது. உலகில் எதிரிடைகளுக்கிடை யில் உள்ள ஒற்றுமைகளின் அடிப்படையில் கட்டியெழுப் பப்படும் அன்புஉலகின் இயக் கத்திற்கு மூலாதாரமான பொருளாகும்.

# வெவ்வேறு மோதல்களில் 25 பயங்கரவாதிகள் ஜம்முவில் கொலை

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பல வேறு மோதல் சம்பவங்களில் 25 பயங்கரவாதிகள் கொல் லப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும் பாலானோர் வெளிநாட்டுக் கூலிப்படையினர் என்று இந் தியப் படையினர் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, பாதுகாப்புப் படையினர் உட்பட 13 பேர் மாத்திரம் இம் மோதல் சம்பவங்களில் காயமடைந் துள்ளதாக செய்திகள் தெரி விக்கின்றன. (உ-7)

# அணிசேரா இயக்க மாநாடு ஆரம்பமானது

(டர்பன்)

அணிசேரா இயக்கத்தின் 13 ஆவது உச்சிமாநாடு நேற்று முன்தினம் தென்னா பிரிக்காவில் ஆரம்பமானது.

பயங்கரவாதம், மத்திய கிழக்குப் பிரச்சினை வறுமை ஒழிப்பு உட்படபலவிடயங்கள் இம் மாநாட்டின் நிகழ்ச்சிநிர லில் உள்ளடக்கப்பட்டுள் ளன.

அணிசேரா இயக்கத்தில் 114 நாடுகள் அங்கம் வகிக்கின் றமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

# குஜராத்தில் குண்டுவெடிப்பு 5 பேர் அவ்விடத்திலே பலி

(புதுடில்லி)

குஜராத்தில் நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம் பவத்தில் 5பேர் கொல்லப் பட்டதுடன் 3பேர் படுகாயம டைந்துள்ளனர்.

குஜராத்தில்கடந்தசிலமாத காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைகளின் தொடர்ச்சி யாக நேற்று இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸ் சந்தேக நபர்கள் 4பேரை கைது செய்துள்ள தாக தெரியவருகிறது. (உ-7)

# வேகப் பந்து வீச்சில் பாகிஸ்தான் வீரர் படைத்த புதிய சாதனை

(புதுடில்லி)

கிரிக்கெட் வரலாற்றில் மணிக்கு 100 மைலுக்கும்அதி கமான வேகத்தில் பந்துவீசிய முதல் வீச்சாளர் என்றபெரு மையை பாகிஸ்தானிய வீரர் சைவ்ப்அக்தர் பெறுகிறார்.

நியூசிலாந்துக் கெதிரான 3 வது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தமது 2 வது ஓவரின் ஆறாவது பந்தை இவர் மக்கிலனிற்கு வீசிய போது அதன் வேகம் மணிக்கு 100.04 மைலாக இருந்தது என்று பாகிஸ்தான் கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது. (உ-9,7)

# கூடிநின்ற மக்கள் மத்தியில் வெடி கொளுத்தியவரை பிடித்துத் தர்மஅடி

(யாழ்ப்பாணம்)

கோயிலில் கூடிநின்ற மக்க ளிடையே வெடியைக்கொளுத் திப் போட்டவர் துரத்திப் பிடிக்கப்பட்டு மக்களால் நையப்புடைக்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமையன்று இரவு நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் பூங்காவன உற் சவம் இடம்பெற்றுக் கொண் டிருந்தவேளை,

அவ்விடம் விரைந்த இளை ஞர்கள் சிலர் வெடிகளைக் கொளுத்தி கூடிநின்ற மக்க ளிடையே போட்டனர்.

இதனால், பீதியுற்ற மக்கள் நாலாபக்கமும் சிதறிப்பதறி ஓடியதாகவும் சம்பந்தப்பட்ட வர்களை மடக்கிப்பிடிக்கும் முயற்சியில் அவ்வூர் இளை ஞர்கள் ஈடுபட்டபோதும் ஒரு வர்தவிர ஏனையோர் ஓட் டம்பிடித்து விட்டதாகவும் கூறப்படுகிறது. (உ)

# இரகசியப் பொலிஸ்என்று ஏமாற்றிய திருடர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இரகசிய பொலிஸார் எனக் கூறிக் கொண்டு பலரை ஏமாற்றி அவர்களின் உடைமைகளை அபகரித்துவந்த நான்குபேரை பொலிஸார் கைதுசெய்துள் ளனர்.

இவர்களிடமிருந்து உள்ளூ ரில் தயாரிக்கப்பட்ட ஒரு துப் பாக்கியையும் கொள்ளை யிடப்பட்டதாகக் கருதப் படும் ஒன்றரை லட்சம்ரூபா பெறுமதியான பொருட்களை யும் அவர்கள் கைப்பற்றியுள் ளனர்.

இதேவேளை, கொழும்பு, மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் இவர்களுக்கு தொடர்புகள் இருப்பதாக வும் இவர்களுடன் தொடர் புடைய மேலும் நால்வரை பொலிஸார் கைதுசெய்ய வுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. (எ-9)

# பேரணியில் பங்கேற்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின்ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தொழிற் சங்கங்களின் அங்கத் தவர்களையும் லங்காசீமெந்து நிறுவன அலுவலகம் முன்னி லையில் ஆரம்பமாகும்கூட்டு மேதினப் பேரணியில் கலந்து கொள்ளுமாறுயாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் சு. பரமநாதன் அறிவித்துள் ளார். (உ)

# மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை 9. 30 மணிக்கு முதல்வர் எஸ். கந்தையன் தலைமையில் இந்து விடுதியில் இடம்பெறவுள்ளது. (உ-19)

## இன்று ஒரு தகவல்

### நாரதர் கர்வபங்கம்

ஒரு சமயம் தேவரிஷியான நாரதர் தம்மைவிடவும் பக்தியில் மிஞ்சியவர் யாருமே கிடையாது என்று நினைத்து கர்வம் கொண்டார். எல்லாம் அறிந்தவராகிய பகவான், நாரதருடைய மனப்போக்கை அறிந்து அவரைத் திருத்தி நல்வழிப்படுத்தத் திருவுள்ளம் கொண்டார். ஆகவே, நாரதரிடம் 'நாரதரே! இன்ன இடத்தில் என் பரமபக்தனாகிய ஒருவன் வாழ்ந்து வருகிறான். அவனிடம் சென்று உறவாடி நட்புக்கொள்ளுங்கள். அவனுடைய தொடர்பை வளர்த்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னார். பகவான் சொன்னபடியே நாரதர் அந்த இடத்திற்குச் சென்றார். அங்கே ஒரு குடியானவன் இருப்பதைப் பார்த்தார்.

குடியானவன் அதிகாலையில் படுக்கையைவிட்டு எழுந்திருக்கும் போது, 'ஸ்ரீ ஹரி' என்று பகவானுடைய பெயரை ஒரு முறை சொன்னான். பிறகு கலப்பையை எடுத்துக் கொண்டு வயலுக்குப் போய் நாள் முழுவதும் உழுதான். மாலை சாய்ந்தபோது வீடு திரும்பினான். இரவு அவன் படுக்கைக்குப் போகும்போது மீண்டும் ஒரு முறை 'ஸ்ரீ ஹரி' என்று பகவானின் பெயரைச் சொன்னான். நாரதர் அவனுடைய வாழ்க்கையை ஒருநாள் முழுவதும் இருந்து கவனித்தார். பிறகு அவர், 'இந்தப் பட்டிக்காட்டான் எப்படிப் பக்திமானாக இருக்கமுடியும்? நாள் முழுவதும் அவன் தன் உலகக் காரியங்களையே கவனித்துக் கொண்டிருக்கிறான். பெரிய பக்திமான் என்பதற்கு உரிய எந்த அடையாளமும் இவனிடம் காணப்படவில்லையே! இவனை எப்படிப் பக்தன் என்று சொல்ல முடியும்?' என்று தமக்குத் தாமே நினைத்துக் கொண்டார்.

பிறகு நாரதர் பரந்தாமனிடம் திரும்பிச் சென்று, குடியானவனைப் பற்றிய தமது அபிப்பிராயத்தைச் சொன்னார். நாரதர் தமது கருத்தைச் சொன்னதும் பகவான் அவரிடம் 'நாரதரே! எண்ணெய் நிரம்பியுள்ள இந்தக் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு இந்தப் பட்டணத்தை ஒரு முறை சுற்றி விட்டு வாருங்கள். ஆனால் ஒரே ஒரு துளி எண்ணெய் கூடக் கீழே சிந்திவிடாமல் ஜாக்கிரதையாக இருங்கள்.' என்று சொல்லி நாரதரை அனுப்பி வைத்தார். நாரதர் பகவான் சொன்னபடியே செய்துமுடித்தார். 'நாரதரே! ஊரைச் சுற்றி வரும்போது எத்தனை முறை தாங்கள் என்னை நினைத்துக் கொண்டீர்கள்' என்று பகவான் வினவினார்.

'பிரபோ, ஒரே ஒரு முறை கூட நினைக்கவில்லை. கிண்ணத்திலிருந்து எண்ணெய் சிந்திவிடக்கூடாது என்பதற்காக நான் கவனமாக இருக்கும் போது, எப்படி உங்களை நினைக்கமுடியும்? அப்போது எனக்கு வேறு எந்த ஞாபகமும் வரவில்லை?' என்று நாரதர் பதில் சொன்னார்.

அதற்குப் பகவான், 'நல்லது நாரதரே, இந்த ஒரு கிண்ணத்தில் உங்கள் கவனம் பதிந்ததனால். என்னை அடியோடு முற்றிலும் மறந்து போய்விட்டீர்கள். ஆனால் அந்தக் குடியானவனைப் பாரும். பாரமான குடும்பச் சுமையைத் தாங்கிக்கொண்டிருந்தாலும், தினந்தோறும் தவறாமல் இரண்டு முறை என்னை அவன் நினைக்கிறான்' என்று கூறியருளினார்.

நன்றி
ஸ்ரீராம கிருஷ்ணர் சொன்ன கதைகள்.

# சமாதான முயற்சிக்கு எதிர்க் கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும்

## பல்கலைக்கழக பேராசிரியர்கள் கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையிலான சமாதான முயற்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும் என்று கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வில், கணிசமான முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது.

இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும் என கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியரான வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகளினை கண்காணிப்பதற்கென பொதுஜன ஐக்கிய முன்னணி அங்கத்தவர்களை கொண்ட குழுவொன்றை நியமிப்பது என்ற ஜனாதிபதியின் தீர்மானத்தை வரவேற்றுள்ள பல்கலைக்கழகப்பேராசிரியர்கள்;

இவ்விரு கட்சிகளும் பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை விடுத்து அரசாங்கமும் எதிர்க்கட்சியும் இணைந்துசமாதான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (உ-8)

### காக்கை தீவுக் கடலில் மீன்பிடிக்க பாஸ்

(ஆனைக்கோட்டை)

காக்கை தீவு கடற்பரப்பில் மீண்டும் பாஸ் நடைமுறை படையினரால் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

சமாதான நகர்வுகளையடுத்து சில காலம் பாஸ் இன்றி மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட போதிலும், தற்போது படையினர் மீண்டும் பாஸ் கேட்டுத் தொல்லை கொடுத்து வருவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-201)

### மிதிவெடியில் சிக்கி காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

மணியம் தோட்டம் பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர் மிதிவெடியில் சிக்கி தனது வலது கால் பாதத்தை இழந்துள்ளார்.

விறகு வியாபாரியான குருநகரைச் சேர்ந்த சேவியர் ஜோசப் (வயது-40) என்பவரே வலது கால் பாதத்தை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

### நடமாடும் சுகாதாரசேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் நடமாடும் சுகாதார சேவை அடுத்த மாதம் 10 ஆம்திகதி யாழ் நகரிலும் 31 ஆம் திகதி அரியாலை மத்தியிலும்இடம் பெறவுள்ளது.

இப்போதுயாழ்மாநகரசபை எல்லைக்குள் வேறு இடங்களில் நடை பெற்று வரும் இச் சேவையிலுள்ள குறைபாடுகள் களையப்பட்டு விஸ்தரிக்கப்படவுள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சேவையில் நோய்ப் பரிசோதனை ஆரோக்கியவாழ்வு கசிப்புஉற்பத்தி சம்பந்தமான அறிவுறுத்தல்கள்என்பன அடங்கியுள்ளன. (எ-19.02)

### வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று பத்தாம் நாளான வரும் 11ம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைதீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (செ)

### பொலிஸ் சேமப்படைக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பொலிஸ் சேமப் படையில், சேமப்படை உப பொலிஸ் பரிசோதகர், சேமப் படை பொலிஸ் கொஸ்தாப்பு, சேமப்படை பெண் பொலிஸ் கொஸ்தாப்பு ஆகிய பதவிகளுக்கு 25 ஆம் திகதி வர்த்தமானியில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் மே மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்பு பணிப்பாளர், இலங்கை பொலிஸ் சேமப் படை தலைமையகம், இல.15 மலலசேகர மாவத்தை, கொழும்பு-7 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். (உ-3)

# இலங்கை பொருளாதாரம் இவ்வாண்டு அதிகரிக்கும்

(கொழும்பு)

பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் இருக்கும் இலங்கையின் பொருளாதாரம், நாட்டின் சமாதான சூழலை அடுத்து மறுமலர்ச்சியை அடையும் எனபொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

நாட்டின் சமாதான முயற்சிகள் வெற்றியடையுமானால், இலங்கையின் பொருளாதாரம் புதிய தொரு வளர்ச்சிப்பாதையை அடையும் எனவும், இதன் மூலம், இவ்வாண்டு இலங்கையின் பொருளாதாரம் 3- 3.5 சதவீத வளர்ச்சியை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5

## ஜே.வி பியின் நம்பிக்கையில்லா பிரேரணை இவ்வாரம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஆறுமுகம் தொண்டமான், ரவூப் ஹக்கீம், சந்திரசேகரன் ஆகிய அமைச்சர்கள் மீதான நம்பிக்கையில்லாப்பிரேரணை இந்தவாரம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி.யின் அரசியல் குழு அண்மையில் கூடி ஆராய்ந்துள்ளது. (செ)

## கசிப்பு காய்ச்சிய பெண்கள் நால்வருக்கு மொட்டையடிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக கசிப்புக் காய்ச்சியநான்குபெண்களுக்கு அவர்களது தலையை மொட்டையடித்து ஊர்வலமாக அழைத்துச் சென்ற சம்பவம் மட்டக்களப்பு வாழைச்சேனையில் இடம் பெற்றுள்ளது.

சமூக அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்த இளைஞர்களே இப் பெண்களின் சட்டவிரோதச் செயலைக் கண்டு பிடித்துள்ளனர். (செ)

## வடமராட்சி பாடசாலைகள் நான்கு கிளிநொச்சி வலயத்துடன் தற்காலிகமாக இணைவு

(மந்திகை)

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த நான்கு பாடசாலைகள் இரண்டாம் தவணை ஆரம்பநாளான நேற்று முதல் கிளிநொச்சி கல்விவலயத்துடன்இணைந்து இயங்கவுள்ளதாகவடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி ரி.செல்வராசா தெரிவித்துள்ளார்.

மருதன்கேணி இந்துதமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி. சி .த .க பாடசாலை ஆகியனவே.

நிர்வாக கட்டமைப்பைக் கவனிக்கும் பொருட்டு தற்காலிகமாக கிளிநொச்சி வலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (உ-23)

## எதிர்வரும் மாதங்களில், வீட்டுக்கொரு பனை நிகழ்ச்சித் திட்டம் அமுல்

(யாழ்ப்பாணம்)

''வீட்டுக்கொரு பனை வளர்ப்போம்'' என்னும் நிகழ்ச்சித் திட்டத்தினை பனை அபிவிருத்திச் சபை எதிர்வரும் மாதங்களில் அமுல்படுத்தவுள்ளது.

இலங்கையில் பனை வளம் காக்கப்பட வேண்டுமாயின், வீட்டுக்கொரு பனையினை கட்டாயம் வளர்க்க வேண்டுடும் என்பதை இதன் மூலம் வலியுறுத்தவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தலைவர் எஸ்.சிவபாதம் தெரிவித்தார். (உ-6)

## கடந்த 4 ஆண்டுகளில் வவுனியா மாவட்டத்தில் 247 தற்கொலைகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தற்கொலை புரிபவர்களின் எண்ணிக்கைவருடாந்தம்அதிகரித்து வருவதுபுள்ளி விபரங்கள்மூலம் அறியக்கிடக்கிறது.

தற்கொலை புரிபவர்களில் பெரும் பாலானவர்கள் ஆண்கள் அதுவும் குடும்பஸ்தர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தவகையில் 1998 இல் 581999 இல் 61,2000இல்62 2001 இல-66 என்ற அடிப்படையில் தற்கொலைகளும் 2000, 2001ஆம் ஆண்டுகளில் முறையே691, 651 தற்கொலை முயற்சிகளும் இடம் பெற்றுள்ளன,

கடந்த வருடம் 47 ஆண்களும் 19 பெண்களும் தற்கொலை செய்துள்ளனர். (உ-3)

## சமாதானம் தொடர்பான ஸ்ரீ. சு. கவின் நிலைப்பாடு அறிவிப்பது தாமதம்

(கொழும்பு)

தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுத்துச் செல்லப்படும்சமாதான முயற்சிகள் தொடர்பான நிலைப்பாட்டை அறிவிப்பது தாமதமாகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சமாதான முயற்சிகள் தொடர்பான ஸ்ரீ.சு. க யின் நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும்,

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கவின் இந்தியப்பயணத்தினாலேயே இத் தாமதம்ஏற்பட்டிருப்பதாகவும்,

கட்சியின் பொதுக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## சிந்தனைக்கு விருந்து

**சமாதான யாத்திரை சாலச் சிறந்ததே!**

கந்தனின் அருளார் மேன்மைக்
கதிர்காமத் திருந்தே மிக்க
பந்தமிந் நாட்டில் வைத்துப்
பலமதத் தவருங் கூடி
இந்தஎம் யாழ்ப்பா ணத்தை
எய்திட நடந்தே வந்து
சந்துக்குப் புனிதஞ் சேர்க்கும்
சால்பது வாழ்க! வாழ்க!

- பழையவன்

சந்து- சமாதானம்.

# அம்பாறை அலுவலகம் மூடப்பட்டது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்டஅரசியல் அலுவலகம் மூடப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கானதீர்மானத்தினை கட்சித் தலைவரும், முஸ்லிம் விவகார அமைச்சருமான ரவூப்ஹக்கீம் எடுத்துள்ளார். (உ-9,8)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்

# தொண்டர் ஆசிரியர்கள் இணைந்து நேற்று தொடர் மறியற் போரை ஆரம்பித்தனர்

மேலதிக மாகாணக் கல்விப்பணிமனையும் யாழ். வலயமும் செயலிழந்தது

(யாழ்ப்பாணம்)

நியமனம் வழங்குவதில் தொடரும் இழுத்தடிப்புக் களைக் கண்டித்து நேற்றைய தினம் யாழ்.மாவட்டதொண்டர் ஆசிரியர்களுடன் இணைந்துபகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் யாழ்.வலயக் கல்வித் திணைக்களம்,மேலதிக மாகாணக்கல்விப் பணிமனை ஆகியன முன்பாக தொடர் மறியல் போரை ஆரம்பித்தனர்.

காலை 7.00 மணியளவில் ஆரம்பமான மறியல் போரினால் மேற்படி இரு அலுவலகங்களும் செயலிழந்ததுடன் ஊழியர்களும் உள்ளே செல்ல முடியாது வீடு திரும்பினர்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது பல நூற்றுக்கணக்கில் பாதிக்கப்பட்டோர் கூடியிருந்தனர்.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராசா இவர்களை அந்த இடத்தில் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடிய போதும் அதனால் முடிவேதும் எட்டப்படவில்லை.

கல்வி அமைச்சின் செயலாளரோ அன்றி அவர் சார்பாகவோ ஒருவர் தமது நியமனம் தொடர்பான எழுத்து மூல உறுதிப்பாட்டினை 2 ஆம் திகதிக்கு முன்னர் வழங்காதவிடத்து,

தமது மறியல் போராட்டம் மற்றைய 4 வலயக் கல்வித் திணைக்களங்களையும் ஸ்தம்பிக்கச் செய்யும் வகையில் விரிவடையும் என்பதை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உறுதிபடத் தெரிவித்தனர்.

இதேவேளை,

கடந்த 19ஆம் திகதி 4அம்சக்கோரிக்கைகளைமுன்வைத்து மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை முன்பாக அடையாள மறியல்போரில்ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோர் தமது கோரிக்கைகளை நிறைவேற்ற 10 நாள் அவகாசம் வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-19

# மேற்கிந்திய, இந்திய அணிகள் சம நிலையில்

(சென்லூசியா)

மேற்கிந்திய தீவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும் பஸ்டா அணிக்குமிடையே சென்லூசியாவில் நடைபெற்ற மூன்று நாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

பஸ்டா அணி முதல் இனிங்ஸில் 437ஓட்டங்களைப் பெற்றது நிமல்ஹஸ் 175 ஓட்டங்களையும் சிறிக் 91ஓட்டங்களையும் எட்லிஜோசப்ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தியா அதன் முதல் இனிங்ஸில் 150 ஓட்டங்களை பெற்றதுஇதில்மொங்கியா 67 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தியா அதன் 2வது இனிங்ஸில் 2 விக்கெட் இழப்பிற்கு 158ஓட்டங்களைப் பெற்றது. (உ-9)

# பயண ஆரம்ப நேரம் படையினர் அறிவுறுத்து

(வவுனியா)

யாழ். கண்டி வீதியில் பயணம் செய்யும் பொது மக்கள் பி.ப 2.00 மணிக்கு முன்னதாக பயணத்தை ஆரம்பித்து விட வேண்டுமென ஓமந்தை இராணுவ சோதனைச்சாவடி பொறுப்பதிகாரி இலங்க ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலை 8.00 மணிக்கு திறக்கப்படும் யாழ்- கண்டி வீதி மாலை 5.00 மணிக்கு மூடப்படுவதால் பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக பயணத்தை ஆரம்பித்து விட வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (த)

# சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டும்

தமிழக மக்கள் பலர் விருப்பம்

(கொழும்பு)

இலங்கையில் எடுக்கப்படும் சமாதானமுயற்சிகள் வெற்றி பெற்று தமிழ் மக்கள் நிம்மதியாக வாழவேண்டும்.

தமிழக மக்களில் பெரும்பாலானவர்கள் இவ்வாறு விருப்பம் தெரிவித்திருப்பதாக அங்கு, இலங்கையின் சமாதானம் தொடர்பாக ஆய்வுநடத்திய கொழும்பு நிறுவனம் ஒன்றின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

# அரச பொதுஊழியர் சங்க 8-வது மேதின விழா

(மட்டக்களப்பு)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் எட்டாவது மேதின விழா நாளை மு.ப. 10.00மணிக்கு சங்கத்தின் தேசிய தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

மேதின விழாவில் பிரபல கல்விமான்களும் ஊடகவியலாளர்களும் கலந்து சிறப்புரையாற்றவுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சமாதானத் திட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதற்கு மேதின வைபவத்தை களமாக உபயோகிக்கவுள்ளதாகவும்,

தொழிலாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் இம்மேதின விழாவில் கலந்துரையாடப்பட்டு ஒரு முடிவெடுக்கப்படவுள்ளதாகவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் க. நடராஜா தெரிவித்துள்ளார். (உ)

ஒப்பந்தத்தை அழித்தவர்களே

# புதிய ஒப்பந்தத்தை ஆக்க வேண்டுமாம்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு தொடர்பாக செய்துகொள்ளப்பட்டஒப்பந்தம்முடிவடையும் நேரத்தில் அதைதீ வைத்து கொளுத்தியவர்கள்புதியஒப்பந்தம்ஒன்றை செய்து தொழிலாளர்களுக்கு விமோசனம் தேடித்தரவேண்டும் என்று மத்திய மாகாண சபை உறுப்பினரும் அம்பாகமுவ பிரதேச இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைப்பு அரசியல் பிரிவு அமைப்பாளருமான எஸ். வெள்ளையன் விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தோட்ட தொழிலாளர்சங்கம்,தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியன தோட்ட முதலாளிமார் சங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம்2வருடங்களுக்குநடைமுறையில்இருந்து வந்தது.

அந்த ஒப்பந்தம் காலாவதியாகிய நேரத்தில் ஐக்கிய இலங்கை தொழிலாளர் முன்னணி ஹற்றனில் நேற்றுமுன்தினம் இதனை தீயிட்டு கொளுத்தியுள்ளது.

எனவே,அவர்கள் புதிய ஒப்பந்தம் ஒன்றை செய்து தோட்ட தொழிலாளருக்கு நியாயமான சம்பள உயர்வை பெற்று கொடுக்கவேண்டியது அவசியம் என அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-9)

# மூடப்பட்டுள்ள வீதிகளின் விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில், மக்கள் பாவனைக்கு படையினரால் தடைசெய்யப்பட்டுள்ள வீதிகளின் விபரங்களை, கோவில் வீதி இல. 195என்ற முகவரியில், அமைந்துள்ள யாழ். மாவட்டகண்காணிப்பு குழு அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# விஞ்ஞானமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தாதிகளுக்கான விஞ்ஞானமாணிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் திறந்த பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம் எனவும்,

திங்கள், செவ்வாய்தவிர்ந்த ஏனைய தினங்களில் பதிவுகள் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

# சமாதானம் தொடர்பாக சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ, சமாதான முயற்சிகள் தொடர்பாக இன்று மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு அதிமேற்றிராணியாரைச் சந்தித்துப் பேசவுள்ளார். (உ)

பச்சிலைப் பள்ளி

# மக்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்து வசித்து வருகின்ற மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்பொழுது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

யாழ். குடாநாட்டிலுள்ள பிரதேச செயலக பிரிவுகளில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் மட்டும் சகல கிராம அலுவலர் பிரிவுகளும் முழுவதுமாக இடம் பெயர்ந்துள்ளன.

இதன் காரணத்தால் இப்பிரிவு கிராம அலுவலர்களால் இக் கடமைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் தாங்கள் தற்காலிகமாக தங்கியுள்ள பகுதி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு இப்பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பளைப் பிரதேச செயலர் எஸ்.புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (உ)

# 29 வரை ரத்வத்தைக்கு விளக்கமறியல் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தையை எதிர் வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கண்டி உடத்தலவின்னவில் 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில்இவர் குற்றம் சாட்டப்பட்டஇவரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்ட போதும் நீதிபதி அதனை நிராகரித்துவிட்டார். (உ-8)

# அபிவிருத்திப்பணிகளுக்காக ஜப்பான் உயர்மட்டக்குழு ஜூனில் இலங்கைவரும்

(கொழும்பு)

ஜப்பான்நாட்டு உயர்மட்டக் குழுவொன்று எதிர்வரும் ஜூன்மாதம் கொழும்பு வரவுள்ளது.

கடந்த சனியன்று கொழும்புவந்த ஜப்பானிய பாராளுமன்றத் தூதுக்குழுவினர், இலங்கையின் சமாதான முயற்சிகள் மற்றும் அதனூடாக அபிவிருத்திப் பணிகளை இங்கு முன்னெடுப்பது ஆகியன குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பலகட்டப் பேச்சுக்களை நடத்தி விட்டு நேற்று ஜப்பான் புறப்பட்டுள்ளனர்.

இக்குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையிலேயே இங்கு அபிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களுடன் ஜூன்மாதம் உயர்மட்டக்குழு இலங்கை வரவுள்ளது.

இதேவேளை, இங்குவந்து சென்ற ஜப்பானியப் பாராளுமன்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசியபோது,

வடக்கில் வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியம்குறித்து வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது. (உ)

# ஹொக்கிப் போட்டித் தொடர் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் விளையாட்டுகழக ஆதரவில் நடத்தப்படும் ஹொக்கிபோட்டித் தொடர் நேற்று ஆரம்பமானது.

இவ் விளையாட்டுதொடரில் இன்றுபி.ப.3.30மணிக்கு பெண்கள் அணியில் பல்கலைக்கழக அணி எதிர்யாழ். ஸ்ரார் அணியும், பி.ப 4.00 மணிக்கு ஈகிள் ஸ்ரார் அணி எதிர் உடற்கல்வி டிப்ளோமா அணியும்,

ஆண்கள் அணியில் பி.ப. 4. 30 மணிக்கு வெட்டுக்கிளி (எ) அணி எதிர் பற்றிசியன் அணி பி.ப .5.00 மணிக்கு உடற்கல்வி டிப்ளோமா (சிவப்பு) அணி எதிர் மனோகரா அணி, பி.ப 5. 30 மணிக்கு பல்கலைக்கழக அணி (கோல்ட்ஸ்) எதிர் சென்றலைற்ஸ் அணி ஆகியன மோதவுள்ளன. (உ-3)

# யாழ். மாநகர சபைக்கு இதுவரை கணக்காளர் நியமிக்கப்படவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்கு இன்று வரை ஒரு கணக்காளர் நியமிக்கப்படாததால் கணக்காளர் மேற்கொள்ள வேண்டிய பணிகளை கணக்குப் பதிவாளர்களே செய்யவேண்டியிருப்பதாக யாழ். நகர முதல்வர் எஸ். கந்தையன் தெரிவித்தார்.

அண்மையில் வடக்கு-கிழக்கில் தமிழர்கள் 27 பேர் கணக்காளராக பதவியேற்றுள்ளனர். இவர்களை வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதேச செயலர் பிரிவு, பிரதேச சபைகள் ஆகியவற்றில் சேவையில் அமர்த்தியுள்ளது.

உண்மையில் யாழ். மாநகர சபையில் இரண்டு கணக்காளர்களுக்கு தேவைப்பாடு உள்ள போதிலும், யாழ். மாநகர சபை தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக யாழ்.மாநகரமுதல்வர்மேலும் கவலை தெரிவித்தார். (உ-19)

…ல்லும் வகையான் அறிவினை …வ்வாதே செல்லும் வாயெல்லாம் செயல்.

-குறள்

## வலம்புரி

### வெடித் தொல்லை

ஷெல் சத்தம், ஆட்லறிச் சத்தம் விமானக் குண்டுச் சத்தம் எல்லாம் ஓய்ந்து ஏதோ புரிந்துணர்வு ஒப்பந்தத்தோடு சற்று நிம்மதியாக உறங்கலாமென்றால் பட்டாசு கொளுத்துவோரின் தொல்லை அரையும் குறையுமாக இருக்கும். உயிரையும் அறுத்தெடுப்பதாக இருக்கிறது.

அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து அத்தியாவசியமான உணவுப் பெருட்களோ, மருந்துப்பொருட்களோ வருவதற்கு முன்…தாக விதம் விதமான பட்டாசுகள் வந்து …விந்து விட்டன.

சீன வெடிகள் சந்தையில் குவிந்தது தான் தாமதம் 'காஞ்ச மாடு கம்பில விழுந்தது போல்' சிறுவர் …ல் விடலைப் பருவத்…ர் வரை வெடி …ளுத்துவதில் மும்முர…க ஈடுபடத் தொடங்கி…ள்ளனர்.

ஒரு காலத்தில் பண்டி…கைகள், விழாக்களின் …து கொளுத்தப்பட்ட வெடிகள் இப்போது … நேரம் பாராது …ளுத்தப்படுகிறது. …விசு வந்தால் அர்த்த…திரியிலும் வெடி …ளுத்த நினைப்பது …ப்பு எனினும் வெடி…க் கொளுத்தி வீடு …மீது எறிவதும் பாத…கள் முன் வீசுவதும் …பத்துக்களைக் கூட …படுத்தலாம்.

சிறுவர்கள், இளைஞர்…ளின் விபரிதச் செயல் சில வேளைகளில் பெரும் …காஷ்டி மோதல்களாக வெடித்து கொலைச் சம்பவங்கள் கூட ஏற்பட…லாம்.

வெறுமனே வெடி கொளுத்துகிறார்கள் என்றில்லாமல் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் செயற்பாடுகள் குறித்து மிக அவதானமாக இருப்…து அவசியமாகும். மற்றவர்களின் வீடுகளுக்குள் வெடிகளைக் கொளுத்தி …றிகின்ற மனித நேய…ற்ற செயல் மாணவர்…ளாகிய சிறுவர்கள் இளைஞர்களிடையே ஏற்…ட்டுள்ளதெனில் ஒட்டு…மொத்தத்தில் எதிர் கால …தி சமூக உணர்வை …றிவிட்டு சமூகச் சீரழி…க்குள் தம்மை உட்…த்தி விட்டனர் என்…த பொருள். எனவே வெடியால் ஏற்படும் விப…த்தை தடுக்க பெற்றோர் முன் வருவது அவ…யமாகும்.

# சின்னம்மை நுண்ணங்கள் வெகுதூரம் பரவுவன

## ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் அதிக பாதிப்பு

சின்னம்மை சுமார் 350 ஆண்டுகளாக மருத்துவ அறிஞர்களுக்குப் பழக்கமானதோர் நோய். பெரியம்மையும், சின்னம்மையும் வெவ்

### மருத்துவ விளக்கம்

வேறானவை என்பது வெகு காலம் வரை தெரியாமல் இருந்தது. சின்னம்மை என்பது பெரியம்மையைப் போல அவ்வளவு கொடியதன்று, சாதாரண நுண்பெருக்காடியினால் காணமுடியாத 'வெரிசெலா' என்ற வைரஸ் நோய் நுண்ணத்தினால் இந்த வியாதி ஏற்படுகிறது. நோயாளி இருமினாலோ அல்லது தும்மினாலோ வெளிப்படும் உமிழ் நீரில் இந்த நோய் நுண்ணங்கள் பெருமளவில் கலந்துள்ளன. காற்றில் இந்த நோய் நுண்ணங்கள் வெகுதூரம் வரை எடுத்துச்செல்லப் படுகின்றன. எனவே இந்த நோய் தொற்றிக் கொள்வதற்கு நோயாளியுடன் நேரடித் தொடர்பு வேண்டும் என்பது அவசியம் இல்லை. எனவே, பெற்றோர்கள், ஆரோக்கியமான தமது குழந்தைகளை நோயாளியிடமிருந்து போதிய தூரத்தில் பிரித்து வைப்பது அவசியம்.

#### நோயின் போக்கு

குழந்தை மேற்படிநோய் நுண்ணத்தினால் தீண்டப்பட்ட 14 நாட்களுக்கு பிறகே சின்னம்மை ஏற்படுகிறது.

**டாக்டர் மைக்கேல்**

இந்தவியாதிகண்டதும் உடல் முழுவதும் சருமத்தின் மீது கொப்புளங்கள் தோன்றுகின்றன. உடலில் வெப்பநிலையும் சிறிதளவு உயருகின்றது. ஆனால் பொதுவான உடல் நிலையும் ஆரோக்கியமும் பாதிக்கப்படுவதில்லை. அம்மைக் கொப்புளங்கள் உடலின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றுகின்றன. முதலில் இவை இளஞ்சிவப்பு நிறமுள்ளவையாக விளங்குகின்றன. பிறகு அவை இரத்தச் சிவப்பாக மாறுகின்றன. இந்தக் கட்டம்தாண்டியதும் கொப்புளங்களில் பனித்துளி போன்ற நீர்சுரக்கிறது. சிறிது நாட்களுக்குப் பிறகு இந்தக் கொப்புளங்கள் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன. அதன் பிறகு கொப்புளங்கள் இருந்தஇடத்தில் சிறுசிறு(வெண்மை)வடுக்கள் காணப்படுகின்றன. ஒரு சில வாரங்களில் இந்தவடுக்களும் மறைந்து விடுகின்றன. நோய் கண்டதிலிருந்து அம்மைக் கொப்புளங்கள் உதிருவதற்கு ஏழு முதல் பதினான்கு நாட்கள் ஆகின்றன.

உரோமமுள்ள பாகங்கள் பாதம், கண்ணிமை ஆகிய பாகங்கள் உட்பட எல்லாப் பகுதிகளிலும் அம்மைக் கொப்புளங்கள் ஏற்படுவதுண்டு.

#### சிக்கல்கள்

நல்ல ஆரோக்கியமானசூழ்நிலையில் வசிக்கும் ஊட்டமான குழந்தைகளுக்கு. மேற்படி வர்ணனைகள் பொருந்தும் ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் வாழுவோருக்குச் சின்னம்மை கண்டால் சிலசிக்கல்கள் ஏற்படக்கூடும். காற்றுவசதியில்லாமல் குழந்தையை இறுக்கப் போர்த்தி வைப்பதாலும் சில சிக்கல்கள் ஏற்படும். இதனால் மயிர்க்கால்கள் சுவாசிக்க முடியாத நிலமை ஏற்பட்டு அம்மைக் கொப்புளங்கள் புரையோடி, பெரியம்மையினால் ஏற்படுவதுபோன்ற நிரந்தரமானவடுக்கள் ஏற்படலாம் இதன் றிக் கொப்புளங்களில் சீழ் பிடித்து இரத்தத்தில் நஞ்சு கலக்கப்பட்டு மரணமே சம்பவிக்கும் நிலைமைகூட ஏற்படலாம். மெனிஞ்சைடிஸ் என்ற மூளைச் சுரமும் ஏற்படுவதுண்டு. ஆனால் இது மிகமிக அரிது மெனிஞ்சைடிஸ் ஏற்பட்டால் கடுமையான சுரம், வாந்தி, உடல் துடிப்பு, முடிவில் பிரக்ஞை தவறிய நிலை ஆகியவை சம்பவிக்கும். இதனால் பெரும்பாலும் மரணமோ அல்லது முடக்கு வியாதியோ சம்பவிக்கலாம். இந்

(4-ம் பக்கம் பார்க்க)

# அதீத மனத்தை அன்பினால் நிரப்பவேண்டும்

## உலக மகாசக்தியான அன்பு எதையும் தாங்கும்

அன்பு உலக மகா சக்தி அது மனித வளர்ச்சிக்கு உயிரோட்டமானது. அன்பின்வழியான வாழ்க்கை சமுதாய நீரோட்டத்திற்கு ஆதார சுருதியானது. உலகில் மேலான விழுமியமாகக் கண்டு கொள்ளப்பட்டது அன்பு தான். அன்பைப் புலன்களால் நோக்க முடியாது. கண்ணுக்கும் புலனாகாததால் அது இல்பொருளுமல்ல, அதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

#### அன்பு அவசியம்

அறிதலும், உணர்தலும் பொருளுண்மையை நிர்ணயிப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றன அறிதலுக்கான அடிப்படை ஆதாரங்கள் ஏறக்குறைய எல்லோருக்கும் பொதுவானகருத்தியலைமுன் வைக்கின்றன. உணர்தல் என்பது அவரவர் மனம், நோக்கு, தேவை சார்ந்து கருத்தூன்றப்படுகின்றது. உருவம் காட்ட முடியாத உயரிய உணர்வுப் பொருளான அன்பை அறிந்து கொள்வதற்கான அளவைகள் இல்லை.

அதை ஆழமாக உணர்ந்து கொள்ளும் போது திருப்திகரமான வாழ்வைப் பெற்றுக்

> 'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தில் கடந்த 26 ம் திகதி நடைபெற்ற முழுநிலாக் கருத்தரங்கில் 'அன்பின் செயற்பாடுகள்' எனும்பொருள்பற்றி யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி உரையாற்றினார். அவ்வுரையின் தொகுப்புஇங்குதரப் படுகிறது.

கொள்ளக்கூடியதாகவுள்ளது.

அவரவர் செய்த பாவ புண்ணியத்திற்குஏற்பவே மனிதன் உலகில் பிறப்பதற்கான அடிப்படை நிலைப்பாடு அமைவதாக இந்து தர்மம் குறிப்பிடுகிறது. விவிலியவேதம்எங்கோ பிறக்க வேண்டியவன் இங்கு பிறந்து விட்டான் அவன் ஒளியைச் சேரவேண்டும் என்கிறது. எல்லாச் சமயங்களும் அடிப்படையில் அன்பையே போதிக்கின்றன.

அன்பு ஏன் அவசியமானது என்பதற்கு அன்பின்வழியதே உயிர்நிலை என்று திருவள்ளுவர் விளக்கம் தருகிறார். எனவே மனிதனைப் பண்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்வதில் பொதுவான கருத்தாக்கங்களையே சமயங்கள் கொண்டுள்ளன. பிறக்கும் மனிதன் ஒவ்வொருவனும் பண்பற்ற உள்ளத்துடனேயே பிறக்கின்றான். நல்ல உயர் விழுமியங்களை ஊட்ட கல்வி உதவுகின்றது

#### உளவியலில் அன்பு

அன்புஎன்ற நற்பண்பு தான் அருள், காதல், கருணை, தயவு தாட்சணியம் என்பன அன்பின் மறுவடிவங்கள். சகலவற்றுக்கும் அடிப்படையான அன்பை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். உளவியல் நோக்கில் அடிமனத்திற்கும் அதீத மனத்திற்கும் இடையிலான போராட்டம் வாழ்வில் பிரச்சினைகளை உண்டு பண்ணுகின்றது. அடிமனத்தில் நிறைவேறாதஆசைகள், இச்சைகள் நிரம்பிக் கிடக்கின்றன. இவற்றை உடைத்தெறிய அதீதமனத்தை அன்பினால் நிரப்ப வேண்டும் என்று உளவியலின் அடிப்படைக் கற்பிதங்கள் எடுத்துச் சொல்கின்றன.

#### உலகமகாசக்தி

கருத்துப் பொருளான அன்பை மனித மனத்தின் மத்திம பொருளாக நிறுத்தக் கூடியதேவை இருக்கிறது. அந்த ஆட்சி செய்வதற்கு அடிப்படைகளாக அறிகை, மனவெழுச்சி அல்லது எழுச்சிக்குட்பட்டவராக இருத்தல் மற்றும் நடத்தை என்பன அமைகின்றன.

அன்பு விளைகின்ற நிலமாக உள்ளத்தை மாற்றுவதற்கு அறிகை இன்றியமையாதது. நெப்போலியன், அலெக்சாண்டர், ஹிட்லர் முதலிய வீரர்கள் வீரம் இருந்தாலும்

(4-ம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:

**எம். எஸ். எஸ். கீர்த்தி**

### தினசரி தியானம்

## அற்பச் செயல்

எச்சிலென்று பூவை யிகழ்ந்தோர்க்கு உனைப் போற்றப்
பச்சிலையுங் கிள்ளப்படுமோ பராபரமே.

- தாயுமானவர்

அண்ணலே, உனது படைப்பில் அற்பச் செயலும் அற்பப் பொருள்களும் இல்லையென்பதை நான் அறிந்து கொள்வேனாக.

மண்ணின் தொகை மாநிலம், மண்ணில் மாண்பில்லா விட்டால் மாநிலத்தில் மாண்பில்லாது போய் விடும். ஈசுவர சிருஷ்டியில் அற்பமானது ஒன்றுமில்லை. சூரியனிடத்துள்ள நிறைவு ஒரு நெருப்புப் பொறியிலுமிருக்கிறது. ஓர் அணுவில் குற்றமேற்பட்டு விட்டால் அண்டத்தில் குற்றம் வந்து விடும். மனிதனது ஒருசிறு செயலில் குற்றமுண்டானால் அவனது பாங்கே குற்றமுடையதாய் விடும். ஒவ்வொரு சிறு செயலும்பெருஞ் செயலாய்த் திகழ்தல் வேண்டும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்




அமைச்சர் எம்.எச்.எம்.முகமட் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்து யாழ் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் மாநாடு நடத்துவதையும், மாநாட்டில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.
படம்:துஷ்யந்தன்

மத்திய மாகாண சபையை

# ஐ.தே.கட்சியிடம் ஒப்படைக்க ஜனாதிபதி இணக்கம்!

மத்திய மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை ஐ.தே.கட்சியிடம் ஒப் படைப்பதற்கு இணக்கம் காணப் பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊட கப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண சபையின் முத லமைச்சர் ஏக்கநாயக்க எதிர்க்கட் சித் தலைவர் டபிள்யூ.பீ.பி.திஸநா யக்கா ஆகியோரை ஜனாதிபதி அழைத்துபேச்சுவார்த்தை நடத்திய தன் மூலமே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு முதலமைச்சர் ஏகநாயக்கா இன்று தனது பதவி யில் இருந்து இராஜினாமா செய் வார் என ஜனாதிபதி செயலக வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து புதிய முத லமைச்சராக மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் டபிள்யூ.பீ.பி திஸநாயக்க ஆளுநர் கே.பி. இரத் நாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளார்.

பதவியேற்கும் வைபவம் இன்று காலை 10மணிக்கு அனுராத புரத்திலுள்ள ஆளு நர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (த)

## அமைச்சர் மூகமட்...

யாழ் வணிகர் கழகப்பணி மனையில் அமைச்சர் யாழ் வர்த்தகர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதேவேளை இன்று அமைச்சர் தென் மராட்சி மற்றும் வடமராட்சி பகுதி களுக்கு விஜயம் செய்யவுள்ளார். (இ-6)

# சுகாதார அமைச்சர் புலிகளின் பகுதிக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப்புலி களின் கட்டுப்பாட்டில் உள்ள கொக்கட்டிச்சோலைப்பகுதிக்கு சுகாதார சமூகநலத்துறை அமைச் சர் ரீ.தயாரட்ண நேற்று உத்தி யோக பூர்வவிஜயம் மேற் கொண் டார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவ ட்ட எல்லைக்கிராமமான மத்திய முகாம்பகுதியூடாக அமைச்சர் நேர டியாக புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு விஜயம் செய்தார்.

அங்கு மகிழடித்தீவு கிராமிய வைத்தியசாலையை பார்வையிட்ட அமைச்சர் ஒரு தொகுதி வைத்திய உபகரணங்களை சுகாதார சேவை கள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.கதிர் முகத்திடம் கையளித்தார்

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி யில் அமைச்சருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சந்திப் பேதும் இடம்பெறவில்லை.

இதேவேளை இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ள மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந் நிகழ்வில் விடுதலைப்புலி களின் அரசியல்துறை பிராந்திய துணைப்பொறுப்பாளர் கே.துரையும் கலந்து கொண்டார். (இ)

## இடைக்கால் நிர்வாக...

இனப்பிரச்சினைக்கான நிலைத்து நிற்கக்கூடிய தீர்வை எட்டும் வகையில் இடைக்கால நிர்வாக சபைக்கு மேலாக நேரடிப் பேச்சு வாத்தைகளில் ஆராயப்படவேண்டியது அவசியம் என் றும் அவர் தெரிவித்துள்ளார்.(த5)

## 5ஆயிரம் பேரை...

இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக் கையால் அரசின் சமாதான முயற் சிகள் எவ்வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது. சமாதான முயற்சிகள் தற் போது மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், இராணுவத்தினரின் மனதில் எத்தகையபாதிப்பும் ஏற் படவில்லை என்றும், அவர்கள் எத னையும் சமாளிக்கக் கூடிய வகையில் மனோபலத்துடன் உள்ளார்கள் என் றும் அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

இது இவ்வாறிருக்க இராணுவத் திற்கு ஆட்களை சேர்ப்பதற்காக அரசு அறிவித்திருப்பதானது சமாதான முயற்சிகளில் பின்னடைவை ஏற்படுத் தலாமென வெளியுலக இராஜதந்திரி கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ம)

## புலி உறுப்பினர்கள்...

விடுதலைப் புலிகளின் அரசியல்ப் பிரிவைச் சேர்ந்த பிரமுகர் புலித் தேவன் தலைமையில் வருகை தந்த 28 போராளிகளில் 6பெண் புலி களும் அடங்குவர்.

வன்னியில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட புலிகளின் அரசி யல் பிரிவுப் போராளிகள் முற்ப கல் 10.30 மணிக்கு முகமாலை இரா ணுவச் சோதனைச் சாவடியை வந் தடைந்தனர்.

அங்கு படையினர் போராளிகளை உடற்சோதனைக்கு உட்படுத்த முற்பட் டபோது இரு தரப்பிற்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாக தெரிய வருகிறது.

பின்னர் பேராளிகள் தம்மைப் படையினர் உடற்சோதனை செய்ய அனுமதித்தாகவும் தெரியவருகிறது.

படையினர் போராளிகளை துரு வித்துருவி சோதனையிட்டதுடன் தொலைத்தொடர்புக் கருவி (வோக் கிடோக்கி) கொண்டு செல்கிறார்களா என்பதைக் கண்டுபிடிக்க கடுமையாக சோதனையிட்டனர்.

படையினரின் இத்தகைய வேண் டத்தகாத நடவடிக்கையால் போரா ளிகள் யாழ் வந்து சேர காலதாம தமேற்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை கடந்த மாதம் 8ம் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த 18 போராளிகள் யாழ்ப்பாணம் வருகை தந்தமையும் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பிரிவு காரியாலயம் திறக்கப்பட்டு அரசியல் பணிகள் இடம் பெறுகின்றமையும் தெரிந்ததே. (இ-6-43)

## சித்திரை மாத நிவாரணம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான சித்திரை மாத உலர் உணவு இது வரை பலநோக்குக் கூட்டுறவுச் சங் கங்களினால் வழங்கப்படவில்லை. என இடம்பெயர்ந்த மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சித்திரை மாத நிவாரணம் தொடர் பாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ் செயலகத்துடன் தொடர்புகொண்டு நிலைமையை எடுத்துக்கூறியுள்ளதாக சங்க வட் டாரங்கள் தகவல் வெளியிட்டுள் ளன (வ)

## கூட்டுறவு உதவி...

தெரிவு செய்யப்பட்டு பல் வேறுவகைப்பட்ட கூட்டுறவுச் சங்க ங்களின் கணக்குகளை கணக்காய் வுசெய்து கூட்டுறவுத்திணைக்கள கணக்காய்வுப் பகுதியின் வேலைப் பழுவைக்குறைக்க இந்தக் கணக் காய்வாளர்கள் உதவிவந்தனர்.

இவர்கள் அனைவரும் நிரந்தரம் ஆக்கப்படுவார்கள் என்று வடக்குக் கிழக்குமாகாண சபையின் கூட்டு றவு பகுதியினர் வாக்குறுதிகளை அளித்திருந்த போதும் கடந்த ஐந்து வருட காலமாக இவர் கள் நிரந்தரமாக்கப்படாமல் இரு ந்து வந்துள்ளார்கள்.

இந் நிலையில் தமக்கு நிரந்தர நியமனம் தருமாறு கோரி இன்று முதல் தொடர்ச்சியாக மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளனர். (ம)

## புலிகளின்...

மு. தங்கவேல், மாவீரர் தம்... யின் தாயார் சின்னமணி, பே... முடியரசியின் தாயார் த... கிராமஉத்தியோகத்தர் ந... மற்றும் இன்பருட்டிப் பிள்ளை... தேவஸ்தான பிரதம குரு, கணபதி சிவானந்தராஜாக் கள் ஆகியோர் ஏற்றி வைத்...

தொடர்ந்து வல்லை மகளி... தியாலய மாணவிகள் தம... தேசிய கீதத்தை இசைக்க, த... தேசியக் கொடியை புலிகளின் ... மராட்சி அரசியல் துறைப் பொறு... பாளர் பாரதி ஏற்றி வைத்தார்.

அகவணக்கத்தை தொடர்ந்து அரசியல் பணிமனையின் பெயர் பலகையை கடற் கரும்புலி கப்டன் தமிழினியின் தாயார் திருமதி மங்களதேவி திரை நீக்கம் செய்து வைக்க வல்வெட்டித்துறை மாவ ட்ட வைத்திய அதிகாரி க.மயிலே றும் பெருமாள் நாடாவை வெட்... அலுவலகத்தை சம்பிரதாய பூர்... மாகத் திறந்து வைத்தார்.

முத்துமாரி அம்பாள் ஆலய... தின் பிரதமகுரு தண்டபாணிக... சிகர், தென்னிந்திய திருச்ச... அடிகளார் எஸ்சுரேந்திரன் ஆகியோ... ஆசியுரையினை வழங்கினர்.

விடுதலைப் புலிகளின் ய... மாவட்ட அரசியல் துறைப் பொறு... பாளர் இளம்பரிதி, புலிகளின் ... பதி பாப்பா, புலிகளின் வட... அரசியல் துறை பொறுப்பாள... தமிழ்தேசியக் கூட்ட... நாடாளுமன்ற உறுப்பினர் ... சிவாஜிலிங்கம், பருத்தித்... ப.நோ.கூ.சங்க தலைவர் ... சிவஞானசுந்தரம் வடமராட்சி ... முன்பள்ளி உதவிக்கல்விப் ... பாளர் து.சத்தியசீலன், வடம... கிழக்கு கடற்றொழிலாளர் ... செயலாளர் நேசரத்தினம், வல்... டித்துறை மாவட்ட வைத்தி... காரி க.மயிலேறும்... ஆகியோர் சிறப்புரை ...

கடற்றொழிலாளர்கள், அமைப்புப் பிரதிநிதிக... கழகங்கள், பாடசா... கள் பொது மக்கள் ... நிகழ்வில் கலந்துகொ... குறிப்பிடத்தக்கது. (த-2...

## தென்னிலங்கை.

எப்போதும் பேச... லாம் என்றும் ... தெரிவித்துள்ளார்.





மில்க்வைற்




மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

லாலா தயாரிப்பு
சண்சயின்
சோப்
மாணவர்களே!
போட்டியில் பங்கு கொள்ளுங்கள்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி
[C/4014]

ராஜா
(யாழ்ப்பாணம்)
3வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
TAMILAN
தினசரி 10.30, 2.30, 5.30
[C/3953]


நீங்காத நினைவில் ஆண்டு இரண்டு



| | |
|---|---|
| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| 14 | 22 |
| 07 | 04 |
| 1930 | 2000 |

அமரர் . சின்னத்துரை சோமசேகரம்
ஓய்வூதியர்– யாழ் மாநகர சபை
திதி 30.04.2002 (சங்கடஹர சதுர்த்தசி)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் அன்பு ஐயா ! நீங்கள்
தில்லைக்கூத்தன் திருவடியில்
என்றும் ஆனந்தத் துயில் கொள்ள
எல்லாம் வல்ல இறைவனை
வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், . பேரப்பிள்ளைகள்
சகோதரர், மைத்துனி,
மைத்துனர், பெறாமக்கள் (C/4023)

39/2புதுவீதி
கொய்யாத்தோட்டம்
யாழ்ப்பாணம்

பாராட்டி வாழ்த்துகிறோ...

தீவக கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர்
*திரு.ப. விக்னேஸ்வரன் அவர்கள்*

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIக்கு 1...
ஆண்டிலிருந்து பதவியுயர்வு பெற்றுள்ளார்.
அவர் பதவியுயர்வு பெற்ற இவ்வேளையில் அ...
பாராட்டுவதுடன், அவரது சேவையில் பணிகள் சிறப்...
மேலும் கல்வி சார் சேவைகளில் பல உயர்வுகள் பெற்...
மனமகிழ்ந்து பாராட்டுகின்றோம்.

*நலன்புரிக் கழகம்*
*தீவக கல்வி வலயத்தின...*

விவசாய சம்மேளன
பொதுக் கூட்டம்

நவாலி விவசாயிகள் சம்மேளன பொதுக்கூட்ட... (30-04-02) செவ்வாய்க்கிழமை பி.பகல் 4 மணிக்... Y.M.C.A. மண்டபத்தில் இடம்பெறும். அ... விவசாயிகளையும் வருகை தருமாறு கேட்கப்பட்...

மேற்படி நிகழ்வில்:
பிரதம விருந்தினராக :- உயர்திரு.க.ஆனந்த... (விவசாய திணை. S...
கௌரவவிருந்தினராக:- உயர்திரு.வி.இளங்குமார் (D.O.ASC - Uduvil)

மா.செல்வராசா - ச.ரமேஷ்...
*தலைவர்* *செயலா...*

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2002ல் அச்சிட்டு வெளியிட...